செய்தி வெளியீடு – 676 நாள் 12.11.2012

**பத்திரிகைச் செய்தி**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் இந்த அரசு கடந்த 2011–ம் ஆண்டு பதவி ஏற்றதும் தமிழகத்தில் ஏழை எளிய மக்கள் உட்பட அனைவருக்கும் தங்கு தடையின்றி உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைத்திட பல்வேறு திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இவ்வுத்தரவை செவ்வனே செயல்படுத்த தமிழக சுகாதாரத் துறை தேவையான துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்பிட எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக கடந்த ஆண்டின் இறுதியில் தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் பட்டமேற்படிப்பில் சிறப்பு மருத்துவம் பயின்று முடித்த 416 சிறப்பு மருத்துவர்களும், அதன் தொடர்ச்சியாக 437 இதர மருத்துவர்களும் ஆக மொத்தம் 853 மருத்துவர் பணியிடங்கள் பணிநியமன கலந்தாய்வுகளின் மூலம் நிரப்பப்பட்டு மருத்துவ சேவை ஆற்றிவருகிறார்கள்.

இந்த ஆண்டில் (2012) மேலும் 835 காலி மருத்துவர் பணியிடங்கள் வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்ப அரசு ஆணையிட்டதின் பேரில் வேலை வாய்ப்பகம் மூலம் பரிந்துரைக்கப்பட்ட நபர்களில் ஜனவரி, மார்ச், ஜுலை மற்றும் ஆகஸ்ட் 2012–ல் நடைபெற்ற பணிநியமன கலந்தாய்வுகள் வாயிலாக 739 மருத்துவ அலுவலர்கள் காலிப்பணியிடங்களில் பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். மீதமுள்ள 96 மருத்துவ அலுவலர்கள் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு பட்டியலில் உள்ள நபர்களுக்கு 16.11.2012 அன்று எழும்பூரில் உள்ள சுகாதாரம் மற்றும் குடும்பநல பயிற்சி மையத்தில் காலை 10.00 மணிக்கு பணிநியமனக் கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவர்களுக்கு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் பற்றிய விவரங்கள் **{ HYPERLINK "http://www.tn.health.org" }** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவர்கள் மட்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் மற்றவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அழைப்பு கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் வேலைவாய்ப்பு அலுவலக பரிந்துரை பட்டியலில் இடம் பெற்றிருந்தால் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

-------

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை–9.